பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 01 | ஞாயிற்றுக்கிழமை | 14.04.2024 | அதிர்வு 257

## கோர விபத்தில் இளம் தம்பதி பலி

வாகன விபத்தில் கணவனும், மனைவியும் சாவடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து 06

# தமிழ் மக்களின் பிரதிநிதிகளைத் தம்வசப்படுத்தி சிங்களப் பேரினவாதத்தை மகிழ்வூட்டும் இந்தியா

## தியாகி அன்னை பூபதி நினைவேந்தலில் கஜேந்திரன் குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ஷன்)

"தமிழர்களுடைய பெயராலே இலங்கைக்குள் மூக்கை நுழைத்துக்கொண்டிருக்கும் இந்தியா தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை தங்களுடைய முகவர்களாகவும் எடுபிடிகளாகவும் பயன்படுத்தித் தமிழ் மக்களின் நலன்களைப் பலியிட்டு சிங்களப் பேரினவாதத்தை மகிழ்ச்சிப்படுத்தி தங்களுடைய நலன்களைப் பேணுகின்ற செயற்பாட்டையே முன்னெடுக்கின்றது."

– இவ்வாறு கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கவலையையும் தெரிவித்துள்ளார். 07

# பொருளாதார மீட்சிக்கான பாதை தேர்தலால் தடம் புரளக் கூடாது!

## ஆசிய அபிவிருத்தி வங்கி முன்னெச்சரிக்கை




கொழும்பு, ஏப்ரல் 14

**இலங்கையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்கள் மூலம் ஏற்படும் ஆட்சி மாற்றம் மற்றும் கொள்கை மாற்றங்கள், நாட்டின் பொருளாதார மீட்சிப் பாதையில் பாதகமான தாக்கத்தைஏற்படுத்துமென ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.** 06

# பொது வேட்பாளர் விவகாரத்தால் தமிழ்க் கட்சிகளிடையே பிளவுகள்?



(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் ஒருமித்த முடிவு எடுப்பதில் தமிழ்க் கட்சிகளிடையே பிளவுகள் அதிகரித்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுப் பிளவை வைத்து அரசியல் காய் நகர்த்த மற்றைய கட்சிகளும் நன்கு முயற்சிக்கின்றன.

அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நல்ல உதாரணம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய அவரது முயற்சி தெரிந்ததுதான். அவர் கூட்டிய கூட்டத்துக்கு அவரைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சிகளினது பிரதிநிதிகளும் செல்லவில்லை என்பதும் தெரிந்ததுதான்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை தலைவர் தெரிவும் , தேசிய மாநாடும் நீதிமன்றத் தடை உத்தரவில் சிக்கி கிடக்கின்றன. 06










# அன்னை பூபதியின் நினைவு ஊர்தி பவனியாக யாழில் நேற்று புறப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு ஊர்தி பவனி யாழில் இருந்து நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலிபனின் நினைவிடத்தில் தியாக தீபத்திற்கும் அன்னை பூபதிக்கும் அஞ்சலி செலுத்தி இந்த ஊர்தி பவனி ஆரம்பிக்கப்பட்டது.

அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடராக நினைவுநாளின் 26 ஆவது நாளான நேற்று அக்கட்சியின் ஏற்பாட்டில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனால் இந்த ஊர்தி பவன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

லநல்லூரில் உள்ள தியாக தீபத்தின் நினைவு தூபியில் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தியமையைத் தொடர்ந்து, தியாகி அன்னை பூபதியின் ஊர்திக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தி யாழில் இருந்து பவனி ஆரம்பமாகியது.

நேற்று ஆரம்பமாகிய ஊர்திப் பவனி தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பல இடங்களுக்கும் சென்று, கடைசியில் நினைவேந்தலின் இறுதிநாளில் மட்டக்களப்பில் உள்ள அன்னை பூபதியின் நினைவுத்தூபிக்குச் சென்று நினைவேந்தலுடன் நிறைவுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.










# ரணிலின் மூலம் தீர்வைப் பெற்றுத் தருவேன்! ஆதரவு தாருங்கள் என டக்ளஸ் வலியுறுத்து



கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறான நிலைப்பாட்டில் இருந்தார் என்பது முக்கியமல்ல. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான விருப்பம் தற்போது அவரிடம் காணப்படுகிறது.

அது மட்டுமல்லாது தற்போதைய காலச்சூழலில் நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றக் கூடிய தலைமைத்துவ ஆளுமையும் அவரிடம் உள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் பல்வேறு அமைப்புகள் மற்றும் துறைசார் நடைபெற்ற மக்களுடனான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்கிரமசிங்க போட்டியிட உள்ளார். அவரே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதற்கும் பல காரணங்கள் உண்டு.

இதேநேரம் அரசியல் ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கான தீர்வினை முன்வைக்க மாட்டார், அவரை எவ்வாறு நம்புவது என சிலர் சிந்திக்கின்றனர். அதனால் தான் நான் கூறுகின்றேன் ரணிலை நம்பாவிட்டால் என்னை நம்புங்கள், நான் செய்விப்பேன் என்று.

இந்நேரம் மக்களின் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக கொண்டு செல்லும் அரசியல்வாதியாக நான் ஒருபோதும் இருக்கப் போவதில்லை. இருந்ததும் கிடையாது. மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இதேவேளை பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக அழிக்கலாம் எனஒ பலர் நம்பியிருக்கவில்லை. ஆனால் நான் நம்பியிருந்தேன். அது நடந்து. நாடும் அமைதி நிலைக்கு வந்துவிட்டது.

அது போன்றுதான் 13 ஆவது அரசமைப்பைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியெனவும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்திருந்தேன். அதை அன்று பலர் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் இன்று அது கிடைத்தாலே போதும் என்று அவர்களே முணுமணுக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆகவேதான் நான் மக்களுக்கு ஒன்றை கூறுகிறேன். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து வாக்குகளால் தமிழ் மக்களின் பலத்தை காட்டுங்கள். மக்களுக்கான தீர்வினை நான் பெற்றுத் தருவேன். - என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாநகர சபை பிரதேசத்துக்குள்ளும் அழையா விருந்தாளியாக நுழையும் முதலை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான வெயிலுடனான காலநிலை நீங்கி மழைபெய்துவரும் நிலையில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி முதலைகள் வருகைதரும் சாத்தியம் இருப்பதால் மக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட - மக்கள் அதிகளவாக வாழும் - கூழாவடி பகுதிக்குள் நுழைந்த முதலையொன்று மக்களினால் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்குள் நீர்நிலைகள் இல்லாதபோதிலும் முதலையொன்று மக்கள் பகுதிக்குள் நுழைந்ததனால் பெரும் பதற்ற நிலைமையேற்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதனை அப்பகுதியை சேர்ந்த மக்கள் பிடித்து அது தொடர்பான தகவல்களை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்தனர். அதைத் தொடர்ந்து அந்த முதலையைக் கொண்டுசெல்லும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தற்போது மழையுடனான காலநிலை நிலவும் நிலையில் முதலைகளின் நடமாட்டம் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மட்டும்

# 5 வயதிற்கு உட்பட்ட 192 சிறுவர்களில் 54 சிறுவர்களுக்குப் போஷாக்கின்மை!






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி கிராமத்தில் 5 வயதிற்கு உட்பட்ட 54 சிறுவர்கள் போஷாக்கின்மை குறைபாட்டிற்கு உட்பட்டுள்ளனர் எனப் பிரதேச செயலகம் சுட்டிக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது 5 ஆயிரத்து 269 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 243 அங்கத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்களில் 1,323 பேர் சிறுவர்கள்.

அங்கு அல்லைப்பிட்டிக் கிராமத்தில் (ஜே-10 பிரிவில்) மட்டும் தற்போது 674 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 178 மக்கள் வசிக்கின்றனர். அவர்களில் 5 வயதிற்கு உட்பட்ட சிறார்கள் 192 பேர் உள்ளனர்.

இந்த 192 சிறுவர்களிலேயே 54 சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவு முழுமையாக 212 சிறுவர்கள் போஷாக்குக் குறைபாடு காரணமாகப் பாதித்துள்ளனர். அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மட்டும் 54 சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டுடன் உள்ளமை வீத அடிப்படையில உச்சமான நிலை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் 1,323 பேரில் 212 பேர் பாதித்துள்ளமையானது 6 அல்லது 7 சிறுர்களில் ஒருவர் பாதிப்பை எதிர்கொள்ளும் நிலையைக் காட்டுகின்றது. ஆனால், அல்லைப்பிட்டியில் 192 சிறுவர்களில் 54 சிறுவர்கள் என்பது 4 சிறுவர்களில் ஒருவர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளமையைக் காட்டுகின்றது. இது பெரும் மந்தபோஷணைக் குறைபாடாகவேக் கருதப்படுகின்றது.

இது தொடர்பில் வேலணைப் பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது –

இந்த விடயம் எமது சிறுவர் அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களினால் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார திணைக்கள அதகாரிகள் சகிதம் உடனடியாக 54 வீடுகளிற்கும் தரிசிப்பு மேற்கொண்டு ஆய்வை முன்னெடுத்து ஓர் அறிக்கை அவசரமாக தயார் செய்யப்படுகின்றது. இந்த அறிக்கை அடுத்த வாரம் மாவட்டச் செயலகம் உட்பட சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி உரிய தீர்வை எட்ட முயற்சிக்கப்படுகின்றது. –

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 917 கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நேற்று 917 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தக் கைதிகள் நேற்று முற்பகல் விடுதலை பெற்று சிறைச்சாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர் எனச் சிறைசாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பின் கீழ் 21 கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 17 கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா சிறைச்

இதனிடையே, புதுவருடத்தினை முன்னிட்டு சிறைக் கைதிகளை பார்வையிடுவதற்கும் நேற்று உறவினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கைதிகளுக்கு உணவு, இனிப்புப் பண்டங்கள் மற்றும் சுகாதார பொருள்களை கையளிக்க முடியும் எனவும் சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் தெரிவித்திருந்தார்.



# சுற்றுலா சென்றவர்களின் வாகனம் பள்ளத்தில் வீழ்ந்தில் 6 பேர் காயம்

## பண்டாரவளையில் மோசமான விபத்து

பண்டாரவளை – கஹகல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹப்புத்தளை பகுதியிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றே வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

காலி பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற குழுவினர் பயணித்த வானே விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த 6 பேரும் சிகிச்சைகளுக்காக தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பண்டாரவளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அலுவலக ரயில் சேவைகள் சில இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளன




இன்று சில அலுவலக ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் இந்த நாள்களில் வழமை போன்று இடம்பெறும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

விசேட நேர அட்டவணையின் கீழ் 6 ரயில்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களுக்காக மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ஏ.எச். பண்டுக ஸ்வரனஹன்ச தெரிவித்துள்ளார்.

# எண்ணெயின் விலை மீண்டும் உலக சந்தையில் அதிகரிப்பு!

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் நேற்றைய விலை 91 அமெரிக்க டொலராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் மசகு எண்ணெயின் விலை 90 அமெரிக்க டொலரை அண்மித்திருந்த நிலையில், தற்போது 1.70 டொலரால் அது அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஏற்படும் மாற்றம் இலங்கையில் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தை பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாதாந்தம் முதலாம் அல்லது அதனை அண்மித்த திகதிகளில் விலை சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் மாதங்களில் வலுவடையும் ரூபாவின் மூலம் வலுசக்தி துறை மேலும் பயனடையுமென தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, கடந்த கால செலவினங்களை மீளப்பெறும் நோக்கில் இந்த விலை சூத்திரம் அமைக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை காரணமாக தலைவராக மாவை சேனாதிராஜாவே தொடர்கின்றார். சுமந்திரன் துணைச் செயலாளர். தலைவர் தெரிவு இடைநிறுத்தப்பட்டிருப்பதால் சிறீதரன் எம்.பி. கட்சியில் ஆக மத்திய குழு மற்றும் அரசியல் குழு உறுப்பினர் மட்டுமே.

நீதியரசர் விக்னேஸ்வரன் தான் கூட்டிய கூட்டத்துக்குத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராஜாவை அழைக்கவில்லை. சிறீதரனைத்தான் அழைத்துள்ளார்.

வேறு விடயங்கள் குறித்துப் பேசுவதாயின் சுமந்திரனையும் அழைக்க வேண்டும் என்று வலியுறுத்துபவர், இந்த விடயத்தில்சுமந்திரனைவெட்டிஒதுக்கிவிட்டார். அவர் (சுமந்திரன்) பொது வேட்பாளர் திட்டத்திற்கு சரி வர மாட்டார் என்று கருதினார் போலும்.

ஆனால் பாவம் விக்னேஸ்வரன்! மற்றைய எல்லா கட்சிகளும் சேர்ந்து அவரை வெட்டிவிட்டமைதான் இதில் பரிதாபத்துக்குரிய விடயம்.

\+ + +

நேற்றுஎனதுபத்தியில், சிலபேருக்குகட்சியிலும் வெளியிலும் எதற்கெடுத்தாலும் சுமந்திரனை எதிர்க்கும் 'சுமந்திரன் போமியா' நோய் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அது குறித்து தவறு ஒன்றை கட்சியின் மற்றொரு மூத்த பிரமுகர் சுட்டிக் காட்டுகிறார்.

அது 'சுமந்திரன் போமியா' அல்ல 'சுமந்திரன் போபியா' (Sumanthiran-phobia) என்று சுட்டிக் காட்டினார் அவர். என் எழுத்துத் தவறுதான். வாசகர்களே! அதைத் திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள்...!

## பொருளாதார மீட்சிக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையின் பொருளாதாரம் மெதுவாக நிலைத்தன்மையை அடைந்து வரும் நிலையில், அதனைப் பாதிக்காத வகையில் தேர்தல் நடத்தப்படுவது சிறந்தது என அந்த வங்கி கூறியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் கடந்த 2022ஆம் ஆண்டில் எதிர்பாராத வகையில்வீழ்ச்சியடைந்தது. இதனால்இலங்கை பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைக்கப் பெற்றது.

இதையடுத்து, தற்போது இலங்கையின் பொருளாதாரம் மேம்பட்டு வருகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் 1.9 வீதத்தாலும், அடுத்த ஆண்டு 2.5 வீதத்தாலும் வளர்ச்சியடையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அண்மையில் தெரிவித்திருந்தது.

எனினும், இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறும் தேர்தல்களால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படக்கூடாது என்று அந்த வங்கி தற்போது வலியுறுத்தியுள்ளது.

# கையடக்கத் தொலைபேசி சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டி?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் கையடக்கத் தொலைபேசிசின்னத்தில்ரணில்விக்கிரமசிங்க களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுச் சின்னம் குறித்து ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலித்து வரும் நிலையில் அந்தப் பட்டியலில் கையடக்கத் தொலைபேசி சின்னம் முன்னிலையில் இருப்பதாக அறியமுடிகின்றது.

அமைச்சர் டிரான் அலஸின் கட்சியான ஐக்கிய மக்கள் கட்சியின் சின்னமே தொலைபேசி சின்னமாகும். அக்கட்சியின் ஆங்கிலப் பெயரின் சுருக்கம் (யூ.பி.பி) என வருகின்றது. ஆக ஐக்கிய தேசியக் கட்சியின் (யூ.என்.பி) என்ற விடயத்துடன் ஓரளவு ஒத்துப்போகின்றது.

அத்துடன், நிலையான தொலைபேசி என்பது அந்தக் காலம், ஸ்மார்ட் போன் என்பதே இந்தக் காலம் எனக் கூறி, சஜித் அணிக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும் இதனைப் பயன்படுத்த முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சின்னம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட சந்தேக நபர் அஹுங்கமவில. கைது

போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கணனி ஒன்றுடன்சந்தேகநபர்ஒருவர்அஹுங்கமவில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் எனக் காலி பிரிவு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர் 500, 1000 மற்றும்5000ரூபாநோட்டுகளைஅச்சிடுவதற்கு தயாரான தாள்கள் மற்றும் போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கணனியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 47 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி நாணயத்தாள்களுக்கு மேலதிகமாக சுற்றுலாப் பயணிகளின் வீசா காலத்தை நீடிப்பதற்காக பெறப்பட்ட 10 கடவுச்சீட்டுகளும் சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முக்கிய முடிவுகளை எடுக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் ஒன்று அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், இக்கூட்டத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எந்தவொரு அரசியல் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவில்லை. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் ஒரு சில பத்தி எழுத்தாளர்களுமே கலந்து கொண்டனர்.

இவ் விடயம் தொடர்பில் அன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வெளிநாட்டில் இருக்கின்றார் எனவும், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சிறீதரன் வவுனியா மற்றும் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொள்வதால் பங்கேற்க முடியாது என அறிவித்தார் எனவும், சுரேஷ் பிரேமச்சந்திரன் வருவார் எனக் கூறினார் என்றும், பின்னர் அவர் வரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

முன்னைய காலங்களில் அனைத்துக் கட்சிக்கூட்டங்களில்குறித்தகட்சியினுடைய தலைவர்கள் சமுகமளிக்காதவிடத்து அவர்கள் சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்புகின்ற வழக்கம் பேணப்பட்டு வந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் எந்தவொரு அரசியல் கட்சி சார்பிலும் எந்தவொரு பிரதிநிதியும் கலந்து கொள்ளவில்லை.

பொது வேட்பாளர் தொடர்பில் பொது வெளியில் அதிகம் பேசக்கூடிய தமிழ் அரசியல் கட்சிகள், விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாமை பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது. இது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் வினவிய போது,

"ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினுடைய தலைமையின் கீழ் பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. அவ்விடயம்தொடர்பில்விக்னேஸ்வரனுடனும்கலந்துரையாடினோம். அனைவருடனும் இணைந்தே செயற்படுவோம்." – என்றார்.

எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை விக்னேஸ்வரன் தலைமையில் மேற்கொள்வதை விரும்பாது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினுடைய தலைமைத்துவத்தின் கீழ்தான் நடைபெற வேண்டும் என கூட்டணியினர் விரும்புகின்றனரா? அதனால்தான் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டத்தை அவர்கள் புறக்கணித்தனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குருநாகல் – மல்லவபிட்டி பிரதேசத்தில் நேற்று இரவு 7.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் தம்பதியினர் மீது எதிரே வந்த ஹயஸ் வாகனம் மோதியதில் இளம் தம்பதியினர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.

குருநாகல் – மாகோ பிரதேசத்தைச் சேர்ந்த 31வயதுடைய கணவனும், 29 வயதுடைய மனைவியுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் அரச உத்தியோகத்தர்கள் என்று தெரியவந்துள்ளது.

ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தமிழ் மக்களின் பிரதிநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தியாகி அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எங்களுடைய தேசத்தின் விடுதலைக்காக தன்னை மெழுகாக உருக்கி உயிர்த்தியாகம் செய்த தியாகி அன்னை பூபதித் தாயின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின் 26 ஆவது நாள் நினைவேந்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த மண்ணிலே இந்திய இராணுவம் காலடி பதித்தது. அவ்வாறு அவர்கள் இந்த மண்ணுக்கு வருகின்றபோது தமிழ் மண்ணுக்கு விடுதலை பெற்றுத் தருகின்றோம், தமிழ் மக்கள் வாழ்நாளில் அனுபவித்த அனைத்து அவலங்களுக்கும் முடிவு கட்டி அவர்கள் சந்தோசமாக - மகிழ்வாக வாழக்கூடிய சூழலை நாங்கள் உரு வாக்கித் தருவோம் என்கின்ற நம்பிக்கைகளைக் கொடுத்து தமிழ் மக்களைச் சாட்டாக வைத்து இந்தியப் படைகள் இலங் கைக்குள் காலடி எடுத்து வைத்தது.

அவ்வாறு அவர்கள் இங்கே வந்திறங்கிய பிற்பாடு இந்திய அரசின்நலன்களோடுமுழுமையாகஒத்துழைத்துச்செயற்படுவதற் குத் தயாராக இலங்கை அரசு தங்களை மாற்றிக்கொண்ட ஒரு சூழலிலே இலங்கை அரசை தனது கைகளுக்குள் போட் டுக்கொண்ட இந்திய அரசு, இலங்கை அரசின் வேண்டு கோள்களை நிறைவேற்ற முயன்ற நிலையிலே தமிழர்களை நிர்க்கதியாகக் கைவிட்டது.

தமிழர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தை முற்றாக கைவிட வேண்டும் என்றும், ஒற்றையாட்சிக்குள் ஜே.ஆர். அரசு தரு கின்ற தீர்வைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைத் தமிழர்கள் மீது ஏற்படுத்தியது.

ஆனாலும் தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வதற்கு தயா ரில்லாத நிலைமையிலே நாங்கள் பாதுகாப்பாக - கௌரவ மாக வாழக் கூடிய ஒரு அரசியல் தீர்வு எங்களுக்கு வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம்.

இருந்தாலும் அவ்வாறானதொரு தீர்வைப் பெற்றுத் தருவதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் விடுதலைப்புலிகள் தங்களிடமி ருந்த ஆயுதங்களைக் கையளித்தார்கள். அவ்வாறு அந்த ஆயுதங்கள் கையளிக்கப்பட்டு தமிழர்களுடைய பாதுகாப்பு இந்தியாவின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தநிலைமையிலே தமிழர் தேசத்தின் மீதி சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கட்டமைப்புசார் இனவழிப்புக்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. அந்தச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிய போதும் கூட இந்தியா அதனைக் கண்டுகொள்ளவில்லை.

அவ்வாறான நிலைமையிலே தமிழர்கள் தங்களைப் பாது காத்துக்கொள்வதற்காக மீண்டும் ஆயுதமேந்திப் போராடும் சூழல் ஏற்பட்டது. இதன்போது தமிழர்களுக்கு எதிராக இந்தி யப் படைகள் தங்கள் துப்பாக்கிகளைத் திருப்பினார்கள்.

அதன் விளைவாக ஆரம்பமாகிய அந்த யுத்தத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் - யுவதிகளை இந்தியப் படைகள் கொன்று குவித்தது. அவ்வாறானதொரு சூழலில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி அம்மையார் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தி ருந்தார்.

இந்திய இராணுவம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளோடு பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற நிலைப்பாட்டை முன்வைத்து உண்ணா நோன்பை அன்னை பூபதி முன்னெடுத்தார்.

ஆனால், காந்தியை வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் அரசியல் செய்கின்ற இந்தியா, ஆறு பிள்ளைகளினுடைய ஒரு தாய் தன்னுடைய உடலை மெழுகாக உருக்கி உணவருந்தாமல் அணுவணுவாகச் செத்துக்கொண்டிருந்தபோது அதனைக் கண்டுகொள்ளவில்லை.

அந்தத் தாய் மரணித்து இன்று 36 ஆண்டுகள் கடந்திருக் கின்றன. ஆனால், இன்றும் எங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. பேரினவாதத்தின் ஒடுக்குமுறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், தமிழர்களுடைய பெயராலே இலங்கைக்குள் மூக்கை நுழைத்துக்கொண்டிருக்கும் இந்தியா தன்னுடைய நலனைப் பேணுவதிலே வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

அதிலும் கவலைக்குரிய விடயம் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைத் தங்களுடைய முகவர்களாக - எடு பிடிகளாக வைத்துக்கொண்டு அவர்களைப் பயன்படுத்தியே தமிழ் மக்களின் நலன்களைப் பலியிட்டு பேரினவாதத்தை மகிழ்ச்சிப்படுத்தித் தங்களுடைய நலன்களைப் பேணுகின்ற செயற்பாட்டை முன்னெடுத்துக்கொண்டு செல்கின்றது.

ஆகவே, இந்த வேளையில் எங்களுடைய தேசத்துக்காக இந்தத் தாய் செய்த தியாகத்தை நினைவுகூருகின்ற அதே நேரத்தில் அவர் அன்று வைத்து கோரிக்கைகள் இன்றும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற நிலையில் எங்களுடைய மக்கள் அடிமைகளாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின் றனர்.

இந்தநிலைமையிலே அரசியல் விடுதலை அடையப்பட வேண்டும். எங்களுடைய தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இலங்கையினுடைய ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டுத் தமிழ்த் தேச இறைமை அங்கீகரிக்கப்பட்ட வகையிலான அரசி யல் தீர்வு எட்டப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை நோக்கி ஒட்டுமொத்தத் தமிழினமும் அணிதிரள வேண்டும்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## போஷாக்கிழந்த சமூகம்

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மட்டும் 5 வயதிற்கு உட்பட்ட மொத்தம் 192 சிறுவர்களில் 54 சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்தில் நான்கு சிறுவர்களில் ஒருவருக்கு போஷாக்கின்மை என்பது பெரும் அதிர்ச்சித் தகவலாகும்.

உலகளாவிய ரீதியில் மந்தபோசணையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படும் முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குவதாக யுனிசெவ்வின் அண்மைக் கால அறிக்கை ஒன்று கூறுகின்றது.

இலங்கையில் தீவிரமடைந்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வின் விளைவாக சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையானது.

அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருள் விலைகள், வாழ்வாதாரப் பாதிப்புகள் என்பன வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

உலக வங்கி ஏப்ரல் 2ஆம் திகதி வெளியிட்ட இலங்கை பற்றிய அறிக்கையின்படி, இலங்கையில் ஏழை மக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கின்றது.

அதன் புள்ளிவிவரங்களின் பிரகாரம், 2019 இல் - கொரோனாத் தாக்கத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் முன்னர் - இலங்கையில் ஏழை மக்களின் எண்ணிக்கை ஆக பதினொரு வீதமாகவே இருந்தது. அது இப்போது - 2024 இல் - 26 வீதமாக அதிகரித்திருக்கின்றது.

இலங்கையில் அறுபது வீதமான குடும்பங்களின் வருமானம் குறைந்து விட்டது என்றும் அந்தப் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

அந்த அறிக்கையின்படி, இலங்கையில் 17.5 வீதமான குடும்பங்கள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை எதிர்த்துப் போராடுவதற்காக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான தங்கள் செலவைக் கணிசமாகக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க வழி தெரியாமல் போராடும் குடும்பங்கள் வேறு வழியின்றி, வயிற்றைக் கட்டி, போஷாக்கை இழக்கின்றமைதான் இப்போது கண்கூடாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் போஷாக்கற்ற நிலைமை அதிகரித்து வருகிறது, அதன் காரணமாகப் போஷாக்கற்ற குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது என்று வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் குறைக்க வேண்டும் என வலியுறுத்தி வடக்கு, கிழக்கு எங்கும் கடந்த வாரம் ஒரே சமயத்தில் அந்த அமைப்பு முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“ஒட்டுமொத்த இலங்கை மக்களதும் அடிப்படை உணவு அரிசிச் சோறு ஆகும். அந்த வகையில் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும், பொருள்களின் விலையேற்றமும் கிராம மட்டங்களில் உள்ள வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களில் பாரிய போஷாக்குக் குறைபாடுகளை ஏற்படுத்தியுள்ளன

“பலர் தொழிலை இழந்துள்ளனர். இந்த நிலையில் அரிசியின் விலையேற்றம் காரணமாகச் சில குடும்பங்கள் மூன்று வேளை உணவுக்குப் பதிலாக ஒன்று அல்லது இரண்டு வேளை உணவை மாத்திரமே உட்கொண்டு வருகின்றன. சில குடும்பங்கள் கஞ்சி காய்ச்சிக் குடிக்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

“நாட்டில் ஏற்பட்ட யுத்தம், கொவிட் தாக்கம், வெள்ள அனர்த்தம், வறட்சி, பொருளாதார நெருக்கடி ஆகியன வறிய மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

“சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிகள் என அனைவருமே போஷாக்கற்ற உணவுகளை உள்ளெடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.இதனால் போஷாக்கற்ற குழந்தைகள் பிறக்கும் விகிதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படுகின்றனர்.

“எனவே இலங்கை அரசு மக்களின் சோற்றில் கை வைக்காமல் மக்களின் வேண்டுகோளையும் பசியின் கொடூர நிலையையும் உணர்ந்து நாட்டில் அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் கீழ் உடனடியாக குறைக்க முன்வர வேண்டும்.” - என்று அந்த மகளிர் அமைப்பு முன்வைக்கும் கோரிக்கை முற்றிலும் நியாயமானது தான்.

பாடசாலைகளில் - பாடசாலை நாள்களில் மட்டும் - சிறாருக்கு காலை ஒரு வேளை இலவச உணவு வழங்குவதன் மூலம் இப்பிரச்சினை தீர்ந்து விடாது. வலிமையான மாற்றுத் திட்டங்களும் செயற்பாடும் அவசியம்.

# ஆட்சியில் இல்லாத காங்கிரஸ் கட்சியை எவ்வளவு காலம் குற்றம்சாட்டுவீர்கள்?

## பா.ஜ.க. மீது பிரியங்கா காந்தி கடும் விமர்சனம்



“கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத காங்கிரஸ் கட்சியை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பா.ஜ.க. குற்றம்சாட்டும்?”

– இவ்வாறு காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

உத்தராகண்டின் நைனிடாலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

“எவ்வளவு காலம்தான் காங்கிரஸை குற்றம்சாட்டுவீர்கள்? கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியில் இல்லை. கடந்த 10 ஆண்டுகளாக முழு பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருந்தவர்கள், இப்போது 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அதாவது, இன்னும் அதிக பெரும்பான்மையை எதிர்பார்க்கிறார்கள்.

பா.ஜ.க. தலைமையிலான அரசு கடந்த 10 ஆண்டுகளாக என்ன செய்தது? 75 ஆண்டுகளில் எதுவும் செய்யவில்லை என்கிறார்கள். எதுவும் நடக்கவில்லை என்றால், உத்தராகண்ட் எப்படி இவ்வளவு திறமையுடன் வளர்ந்திருக்கிறது? ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், எய்ம்ஸ் எங்கிருந்து வந்தது? இதற்கு யார் காரணம்? 1950 களில் பண்டிட் ஜவஹர்லால் நேரு முன்முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால் சந்திரயான் வெற்றிக்கான விதைகள் சாத்தியமா?

காஸ் சிலிண்டர் விலையைக் குறைத்திருப்பதாக இப்போது சொல்கிறார்கள். ஆனால், கடந்த பல ஆண்டுகளாக காஸ் சிலிண்டருக்கு 1,200 ரூபா கொடுக்கவில்லையா? அப்போதெல்லாம் நாட்டை ஆண்டது யார்... பா.ஜ.கவும், பிரதமர் மோடியும்தானே?

இன்றைய உண்மையான பிரச்சினை பணவீக்கம், வேலையின்மை, ஊழல் ஆகியவைதான். பிரதமர் மோடி நாட்டு மக்களிடம் என்ன கூறுகிறாரோ அதுவல்ல.

பிரதமர் மோடி சமீபத்தில் ரிஷிகேஷில் ஆற்றிய உரையில், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு என்ன கூறினாரோ அதையேதான் கூறினார். அவருடைய பேச்சைக் கேட்டு நான் குழப்பமும் ஆச்சரியமும் அடைந்தேன். அவருடைய ஆட்சியில் மக்கள் அனைவரும் எவ்வளவு காலம்தான் துன்பப்படுவார்கள்?

பிரதமர் மோடி தனது ஒவ்வொரு பேச்சிலும் உத்தரகாண்ட் மற்றும் ஹிமாச்சலப் பிரதேசத்தை ‘தேவ பூமி’ என்று அழைக்கிறார். ஹிமாச்சலப் பிரதேசம் கடந்த ஆண்டு இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டபோது, அந்த தேவ பூமியை அவர் புறக்கணித்தார். நிவாரணத்துக்கோ, மறுசீரமைப்பு பணிகளுக்கோ அவர் எந்த நிதியையும் வழங்கவில்லை.” – என்றார்.

# ராகுல் காந்தியின் ஒருநாள் வருகையிலேயே மோடியின் மொத்தப் பிரச்சாரமும் தோற்றது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்

“சகோதரர் ராகுல் காந்தி கோவைக்கு வந்திருந்தார். எப்படி இருந்தது? பாகுபலி படம் போன்று பிரமாண்டமாக இருந்திருந்ததே. ராகுல் காந்தியின் ஒருநாள் வருகையே, பிரதமர் மோடியின் மொத்தப் பிரச்சாரப் பயணத்தையும் காலி செய்துவிட்டது.”

– இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சகோதரர் ராகுல் காந்தி கோவைக்கு நேற்று வந்திருந்தார். எப்படி இருந்தது? பாகுபலி படம் போன்று பிரமாண்டமாக இருந்திருந்ததே. “ஒரே ஒரு மீட்டிங். டோட்டல் பி.ஜே.பியும் க்ளோஸ்”. ராகுல் காந்தியின் ஒருநாள் வருகையே பிரதமர் மோடியின் மொத்தப் பிரச்சாரப் பயணத்தையும் காலி செய்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களை உண்மையான அன்பால் மட்டும்தான் ஆள முடியும் என்று ராகுல் காந்தி நிரூபித்துவிட்டார். சகோதரர் ராகுலின் பேச்சை எல்லோரும் கேட்டிருப்பீர்கள். அவர் தமிழ்நாட்டை எந்த அளவுக்கு மதிக்கிறார் என்று அதிலேயே தெரிந்திருக்கும்.

இந்தியாவைப் புரிந்துகொள்ளத் தனக்கு வழிகாட்டியாக இருப்பதே தமிழ்நாடும், தமிழ்நாட்டு வரலாறும், தமிழ்நாட்டு அரசியலும்தான் என்று சொல்லி, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கருணாநிதி என்று நம்முடைய தலைவர்களை மனதாரப் போற்றினார். நடக்கின்ற தேர்தல் என்பது, சாதாரணத் தேர்தல் அல்ல. இரண்டு தத்துவங்களுக்கு இடையிலான போர் என்று நாட்டு மக்களுக்கு உணர்த்தியிருக்கிறார்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கி, சமூக நீதியின் ஒளிவிளக்காகத் திகழும் ஆட்சிதான் தி.மு.க.



ஆட்சி. ஆனால், மோடி மறுபடியும் ஆட்சிக்கு வந்தால் முதலில் இடஒதுக்கீட்டைத்தான் ரத்து செய்வார். ஏன் என்றால், பா.ஜ.க.வுக்கு சமூகநீதி என்றாலே அலர்ஜி. இந்தியா விடுதலை பெற்றபோது, பல நாடுகள் என்ன சொன்னார்கள்? ‘பலதரப்பட்ட மக்கள் வாழும் நாடு, அமைதியாக இருக்காது, பெற்ற சுதந்திரத்தை இவர்கள் ஒழுங்காக காப்பாற்ற மாட்டார்கள்’ என்று பல நாடுகள் கூறினார்கள். ஆனால், அவர்களின் கணிப்புகளைப் பொய்யாக்கி, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது என்றால் அதற்குக் காரணம், ஜனநாயகக் கட்டமைப்புடன் நாடு இயங்க அடிப்படையாக இருக்கும் அரசியலமைப்புச் சட்டம்தான்.

மோடி மறுபடியும் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் புரட்சியாளர் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சட்டத்தையே மாற்றிவிடுவார். அதனால்தான் சொல்கிறோம். மோடி ஆட்சிக்கு வருவது என்பது அரசியல் சட்டத்திற்கு ஆபத்து. ஜனநாயகத்திற்கு ஆபத்து. ஒட்டுமொத்த நாட்டிற்கே பேராபத்து. ஏன் என்றால், பத்தாண்டுகாலமாக பாஜக ஆட்சியைப் பார்த்துவிட்டோம். கலவரம் செய்வது என்பது பாஜகவின் மரபணுவில் ஊறியது.” – என்றார்.

# சிட்னியில் உள்ள வணிக வளாகத்திற்குள் கத்திக்குத்து தாக்குதல்; 6 பேர் உயிரிழப்பு







அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நபர் ஒருவர் மேற்கொண்ட கத்திக்குத்து தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலத்த காயங்களுடன் குழந்தை ஒன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றது.

சிட்னி நகரின் Bondi Junction அருகே அமைந்துள்ள மிகப்பெரிய வணிக வளாகத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

40 வயதான நபர் ஒருவர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளார். அந்நபர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான நான்கு பெண்களும் ஒரு ஆணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். காயமடைந்த மற்றுமொரு பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

9 மாத குழந்தை உட்பட 8 பேர் காயங்களுடன் சிட்னியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்த குழந்தையின் தாயும் உயிரிழந்தவர்களில் அடங்குகின்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குழந்தைக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Bondi Junction-இல் உள்ள வணிக வளாகத்திற்குள் (உள்ளூர் நேரப்படி சுமார் 15:10 மணியளவில்) நுழைந்த நபர், அங்கிருந்து சென்று விட்டு 10 நிமிடங்களின் பின்னர் திரும்பி வந்து தாக்குதலை நடத்தியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த சிரேஷ்ட பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரே தாக்குதல்தாரியை சுட்டுக் கொன்றுள்ளார்.

# உலகின் மிகவும் வயதான இரட்டையர்கள் உயிரிழப்பு

## ஒட்டிப்பிறந்து முரண்பாடுகளை தகர்த்து 62 வயது வரை வாழ்ந்து சாதனை



உலகின் மிகவும் வயதான ஒட்டிப்பிறந்த இரட்டையர்களான லோரி மற்றும் ஜார்ஜ் ஷாப்பல், அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழக்கும் போது அவர்களுக்கு 62 வயது 202 நாள்கள் எனவும், பென்சில்வேனியா பல்கலைக்கழக வைத்தியசாலையில் இவர்களின் உயிர் பிரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் “கின்னஸ் உலக சாதனைகள்“ உறுதிப்படுத்தியுள்ளது. அவர்களின் இறப்புக்கான காரணம் வெளியிடப்படவில்லை.

லோரி மற்றும் ஜார்ஜ் ஆகியோர் 1961 செப்டம்பர் 18ஆம் திகதி அன்று பென்சில்வேனியாவில் ஃபிராங்க்ளின் மற்றும் ரூத் ஷாப்பல் ஆகியோருக்கு பிறந்தனர்.

இந்த இருவரும் பகுதியளவு இணைந்த மண்டை ஓடுகள், முக்கிய இரத்த நாளங்கள் மற்றும் அவர்களின் மூளையின் 30 சதவீதத்தை பகிர்ந்து கொண்டனர்

2007 ஆம் ஆண்டில், ஜார்ஜ் ஆணாக மாறிய பிறகு வெவ்வேறு பாலினங்களாக அடையாளம் காணப்பட்ட உலகின் முதல் ஒரே பாலின ஒட்டிப்பிறந்த இரட்டையர்களாகவும் ஆனார்கள்.

லோரி உடல் திறன் கொண்டவர் ஆனால் ஜார்ஜுக்கு ஸ்பைனா பிஃபிடா இருந்ததால் நடக்க முடியவில்லை. இருப்பினும், அவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து செல்வதற்கான எந்த விருப்பத்தையும் வெளிப்படுத்தவில்லை.

அவர்கள் 30 வயதுக்கு மேல் வாழ மாட்டார்கள் என்று மருத்துவ வல்லுநர்கள் கணித்திருந்தனர். எனினும், அவர்கள் எல்லா முரண்பாடுகளையும் உடைத்தெறிந்து 62 வயது வரை வாழ்ந்துள்ளனர்.



## தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு

# ஜனாதிபதியிடமிருந்து சிறுவர் இல்லங்களுக்குப் பரிசு

தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நாடளாவிய ரீதியிலிருக்கும் 336 சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் மற்றும் பரிசுப் பொதிகள் என்பன நேற்று பகிர்ந்தளிக்கப்பட்டன.

கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட பகுதிகளிலிருக்கும் சிறுவர் இல்லங்களில் புத்தாண்டு பரிசுப் பொதிகள் வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிகப்பட்டுள்ள நிலையில், இம்முறை அந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் உள்ள சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்படும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் பரிசுகளும் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

வீடுகள் அல்லது பெற்றோரின் அரவணைப்பு கிடைக்கா விட்டாலும் சகல பிள்ளைகளுக்கும் புத்தாண்டு மகிழ்ச்சி கிட்ட வேண்டும் என்ற நோக்கில், “சிறுவர் இல்லக் குழந்தைகளுக் கும் புத்தாண்டு” என்ற தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி அலுவலகம், “சிலோன் பிஸ்கட் கம்பனி” மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாடளாவிய ரீதியிலுள்ள சிறுவர் இல்லங்களில் பராமரிக் கப்படும், 10 ஆயிரத்துக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியுடன் இனிப்புப் பண்டங்களும் பரிசுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் மேற்பார் வையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, மத்திய மாகாணத்தி 40 நிலையங்கள், கிழக்கு மாகாணத்தில் 57 நிலையங்கள், வடமத்திய மாகாணத்தில் 16 நிலையங்கள், வடக்கு மாகாணத்தில் 23 நிலையங் கள், சப்ரகமுவ மாகாணத்தில் 19 நிலையங்கள், தென் மாகா ணத்தில் 25 நிலையங்கள், ஊவா மாகாணத்தில் 14 நிலையங்கள், மேல் மாகாணத்தில் 106 நிலையங்கள் உள்ளடங்களாக 336 சிறுவர் மேம்பாட்டு நிலையங்க ளில் பராமரிக்கப்படும் பிள்ளைகளுக்கு பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.











# பொது வேட்பாளர் அடையாளத்தோடு கரையேற முயற்சிக்கும் விக்கி!



புருஜோத்தமன் தங்கமயில்

வாக்கு அரசியலை முதன்மைத் தெரிவாகக் கொண்டவர்களில் அநேகர், அடுத்தவர் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் உத்தியை அரசியல் செல்நெறியாகக் கொண்டவர்கள். அவர்களினால் சமூகத்துக்கு எந்த நன்மையும் எந்தக் காலத்திலும் ஏற்படுவதில்லை. மாறாக, அவர்கள் தங்களின் சுயநலனுக்கான ஓட்டத்தில் குறியாக இருப்பார்கள். அதற்காக யாரையும் எந்த நேரத்திலும் முதுகில் குத்துவதற்கும் தயங்க மாட்டார்கள். அப்படியானவர்கள், அர்ப்பணிப்போடு எழுந்த தமிழ்த் தேசிய அரசியலையும் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதுதான், பெரும் சாபக் கேடு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கான தியாகத்தை தங்களின் சுயநல அரசியலுக்காக காட்சிப் பொருளாக்கி விற்று மக்களை ஏமாற்றும் நபர்கள், இன்று அரசியலில் முதன்மை இடங்களை அடைய முயல்கிறார்கள். அவர்கள், அதிக நேரங்களில் தலைவர் பிரபாகரனைத் தாண்டி தாங்கள் போராட்டத்துக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியவர்கள் போல பேசுகிறார்கள். ஆனால், விடுதலைப் புலிகள் போராட்டக்களத்தில் கோலோச்சிய சந்தர்ப்பத்தில், அந்தப் போராட்டத்தை புறக்கணித்து ஓடுவதிலேயே குறியாக இருந்திருக்கிறார்கள். அதுபோல், தமிழ்த் தேசியக் கட்சிகளும் இயக்கங்களும் மக்களோடு மக்களாக நின்று போராடிச் சேர்த்த பெயரைக் கொண்டு அரசியல் அதிகாரப் பதவிகளில் அமர்ந்துவிட்ட சிலர், மீண்டும் மீண்டும் அடுத்தவர்களின் உழைப்பைக் கொண்டு அதிகாரத்தில் அமரும் உத்தியை தெரிவாகக் கொள்கிறார்கள். அதில், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதலிடத்தில் இருக்கிறார். இப்போது, மீண்டும் அவர், ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தைப் பிடித்துக் கொண்டு அதில், எப்படி தனிப்பட்ட ஆதாயத்தை அடையலாம் என்று அலைந்து கொண்டிருக்கிறார்.

நீதியரசராக இருந்து ஓய்வுபெற்ற விக்னேஸ்வரன், கொலை மற்றும் பாலியல் குற்றங்களுக்காக இந்தியாவில் தண்டிக்கப்பட்ட பிரேமனந்தாவின் சீடராக இருந்து தன்னுடைய காலத்தைக் கழித்து வந்தார். அதுபோல, சமூகத்தில் அந்தஸ்துள்ள ஓய்வூதியர்களைத் தேடி அலையும் கம்பன் கழகத்தின் முக்கிய விருந்தினராகவும் அவர் இருந்து வந்தார். இந்த விடயங்கள் தாண்டி, விக்னேஸ்வரன் எந்தவொரு சமூகத் தொண்டையும் ஆற்றியவராக வரலாறு இல்லை.

## வடக்கு மாகாண சபைத் தேர்தல்

இந்தியாவின் அழுத்தங்களை அடுத்து 2013ஆம் ஆண்டு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்ற போது, முதலமைச்சராக மேல்தட்டு முகமொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனுக்கு தேவைப்பட்டது. அந்தக் கட்டத்தை கம்பன் கழகமும், கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர்களும், சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் போன்றவர்களும் விக்னேஸ்வரனைக் கொண்டு பிரதியிட்டார்கள். கம்பன் கழகத்தினர், விக்னேஸ்வரனை வீராதி வீரராக காட்டி பல கட்டுரைகளையெல்லாம் எழுதித் தள்ளினார்கள். இந்த

தொடர்ச்சி ▼

# பொது வேட்பாளர் அடையாளத்தோடு கரையேற முயற்சிக்கும் விக்கி!

தொடர்ச்சி ▲

சமூக அந்தஸ்து – மேல்தட்டு வர்க்கத்தினர் இணைந்து, சம்பந்தனின் எதிர்பார்ப்பாக விக்னேஸ்வரனை முன்னிறுத்தி வடக்கு மாகாண தமிழ் மக்களின் தலையில் கட்டினார்கள். தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பினரின் எதிர்ப்புக்களை மீறி விக்னேஸ்வரனை, சம்பந்தனும், அவருக்குத் துணையாக நின்று எம்.ஏ.சுமந்திரனும் யாழ்ப்பாணம் அழைத்து வந்து, இலகுவாக முதலமைச்சராக்கினார்கள்.

விக்னேஸ்வரனைப் பொறுத்தளவில் அவருக்கு அரசியல் அனுபவம் என்பது சுத்தமாக இல்லை. நீதித்துறையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்றவர், மூன்று மொழிகளும் அறிந்தவர் என்ற கருதியவர்களுடன்கூட பேசுவதற்கு தயாராக இருந்த அரசியலைத் தெரிவாக் கொண்டவர். விடுதலைப் புலிகளின் கருத்தியலுக்கு நேர் எதிராக நின்று, 2000களில் புலிகளின் நிலைப்பாடுகளின் பக்கத்திற்கு வந்து, புலிகளினாலேயே, கூட்டமைப்பின் தலைவராக ஏற்கப்பட்டவர். புலிகளின் காலத்துக்குப் பின்னரும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் சம்பந்தனை எதிர்த்துக் கேள்வி எழுப்புவதற்கு தயக்கம் கொள்ளும் அளவுக்கான அரசியல் ஆளுமையாக தன்னை நிலை நிறுத்தியவர். அப்படிப்பட்ட நீண்ட அரசியலைக் கொண்ட சம்பந்தனுக்குக் கிடைக்கும் அரசியல் அந்தஸ்தினை, அரசியலுக்கு திடீரென்று அழைத்து வரப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்ட விக்னேஸ்வரனும் எதிர்



பார்த்தமைதான், சிறுபிள்ளைத்தனமானது. அதன்பின்னராக காலத்தில் அவர் செய்தது முழுவதும் முன்பள்ளி மாணவருக்கான அறிவுள்ள அரசியலும், அதிகாரத்துக்காக அடுத்தவர் உழைப்பை அபகரிக்கும் முயற்சிகளும் மாத்திரமே.

தகுதியைத் தாண்டி அவர், எப்படி தமிழ்த் தேசிய அரசியலில் முதன்மைத் தெரிவாக முன்மொழியப்பட்டார் என்பதை, இன்று வரையில் சம்பந்தனும் சுமந்திரனும் கூறவேயில்லை. ஆனால், விக்னேஸ்வரனுக்காக பல கட்டுரைகளை எழுதி பிம்பக் கட்டமைப்புச் செய்த கம்பன் கழகம், கொஞ்சக் காலத்திலேயே, தங்களின் கடந்த கால செயலுக்காக அழுது வடிக்கத் தொடங்கிவிட்டது.

வடக்கு முதலமைச்சரான காலம் முதல் விக்னேஸ்வரனின் எதிர்பார்ப்பு என்பது, தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்தன் வகித்து வந்த நிலையைக் குறித்ததானது மட்டுமே. எப்படியாவது, சம்பந்தனுக்கு கிடைக்கும் அரசியல் அந்தஸ்தும் முடிவெடுக்கும் அதிகாரமும் தனக்கும் வேண்டுமென்று அங்கலாய்ந்தார். ஆனால், சம்பந்தனுக்கு என்று நீண்ட அரசியல் வரலாறு உண்டு. அவர், தேர்தல்களில் நின்று வென்றும் தோற்றும் இருக்கிறார். அவர், தன்னுடைய அரசியல் நிலைப்பாடுகளோடு ஒத்துழைக்காதவர்கள் என்று

கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் என்ற அடையாளம் கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய அரசியலில் பொது வேட்பாளர் என்ற வகையில் அமைந்திருந்தது. ஆனால், விக்னேஸ்வரன் மாகாண சபையை ஒழுங்காக நடத்தாமல், தீர்மானங்களை இயற்றும் சபையாக மாத்திரம் நடத்தத் தலைப்பட்டார். அத்தோடு, முதலமைச்சர் என்ற பதவி நிலையினைக் கொண்டு, தனக்கு என்றொரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கும் திட்டங்களில் குறியாக இருந்தார். அந்தக் கட்டத்தில்தான், தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் நீண்ட கால காத்திருப்பின் பேரில்,

தொடர்ச்சி ▼

# பொது வேட்பாளர் அடையாளத்தோடு கரையேற முயற்சிக்கும் விக்கி!

தொடர்ச்சி ▲

அமைப்பொன்று தோற்றம் பெற்றது. அந்த அமைப்பின் நோக்கம் தெளிவானது, அதாவது, தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்தனுக்கு மாற்றான தலைவரைத் தேடிக் கண்டடைவது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை புலம்பெயர் தேசத்திலுள்ள சில கட்டமைப்புக்கள் மாற்றுத் தலைவராக உணர்ந்தாலும், அவரோடு தமிழ் சிவில் சமூக அமையம் இணங்கிச் செயற்பட்டாலும் சம்பந்தனுக்கு மாற்றான தலைவராக கஜேந்திரகுமாரினால் தாக்குப் பிடிக்க முடியாது என்ற கள யதார்த்தம் முகத்தில் அறைந்தது. அந்தத் தருணத்தில்தான், சம்பந்தனின் நடவடிக்கைகளை விமர்சித்துக் கொண்டு அரங்கிற்கு வந்த விக்னேஸ்வரனை, மாற்றுத் தலைமைக்கான தெரிவாக தமிழ் மக்கள் பேரவையின் மூல கர்த்தாக்கள் முன்னிறுத்தினார்கள். அவர்கள், விக்னேஸ்வரன்தான் மாற்றுத் தலைவர் என்று கஜேந்திரகுமாரைக் கூட நம்ப வைத்திருந்தார்கள்.ஆனால், சிவில் சமூக அமையத்திடமோ, அதன்பின்னராக பெயர் மாற்றம் பெற்று வந்த தமிழ் மக்கள் பேரவையிடமோ களத்தில் இறங்கி வேலை செய்வதற்கான அர்ப்பணிப்பு ஏதும் இல்லை. அந்த இடத்தை, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புளொட் உள்ளிட்ட கட்சிகளைக் கொண்டு நிரம்பினார்கள். இந்தக் கட்டமைப்பின் தலைவராக விக்னேஸ்வரன் அமர்த்தப்பட்டதும், அவர் தன்னை சம்பந்தனாக உணர்ந்தார். அவரை அன்று சுற்றியிருந்த வைத்தியர்கள், புலமையாளர்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் தரப்பினரும், விக்னேஸ்வரனை சுற்றி ஒளிவட்டங்களை வரைந்து, தலைவர் பிரபாகரனுக்கு பின்னரான தமிழ்த் தேசியக் காப்பாளன் என்று முன்னிறுத்தினர். ஆனால், இந்தப் படங்காட்டல்கள் எல்லாமும் சில மாதங்களுக்குள் காணாமற்போயின. ஏனெனில், விக்னேஸ்வரன் யாரோடும் இணக்கமாக வேலை செய்வதற்கு தயாராக இல்லாதவர். தான் நினைத்தது நடக்கவில்லை என்றால், யாரையும் விலக்கி விடும் எண்ணத்தினைக் கொண்டவர். அந்த மன நிலையினால், 'எழுக தமிழ்' தொடங்கி பேரெழுச்சியோடு தமிழரசுக் கட்சிக்கு அச்சுறுத்தலை விடுத்த தமிழ் மக்கள் பேரவை கலகலத்துப் போனது. அதிலிருந்து கஜேந்திரகுமாரின் முன்னணி வெளியேறியது. சித்தார்த்தன் கூட்டமைப்பை விட்டு விலக தயாராக இருக்கவில்லை. ஒரு கட்டத்தில் போக்கிடமின்றி இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், தமிழரசுக் கட்சிக்குள் இருந்து வெளியேறிய அருந்தவபாலன் போன்றவர்களும் விக்னேஸ்வரனைக் காப்பாற்றினார்கள். அதனால்தான், அவரினால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உதிரி வாக்குகளைக் கொண்டு வெற்றி பெற முடிந்தது.

இன்னொரு தேர்தலென்று வந்தால், விக்னேஸ்வரனால் வெற்றிபெற முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் கட்டத்தில்தான், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்னிறுத்தியது. எப்படிக் கரையேறுவது என்று காத்திருந்த விக்னேஸ்வரன், பொது வேட்பாளர் என்ற கயிற்றைப் பிடித்துக் கொண்டார். அதன்மூலம், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் ஏற்பாடுகளின் போக்கில் இப்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற ஏற்பாடு ரணில் – ராஜபக்ஷக்கள் கூட்டை வெற்றிபெற வைக்கும் முயற்சி என்று இந்தப் பத்தியாளர் ஏற்கனவே எழுதியிருக்கிறார். அது தற்போதைய சூழலில் தமிழ் மக்களின் தெரிவாக இருக்கவும் போதில்லை. அப்படியான நிலையில், அது ஒருசில தரப்பினரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் திட்டமாகவே கொள்ள முடியும். அந்தக் கட்டத்தை இப்போது, விக்னேஸ்வரன் தெளிவாக அபகரித்து முன்னெடுக்கிறார். யாழ்ப்பாணத்தில் சிலரினால், ஆரம்பிக்கப்பட்ட மக்கள் மனு என்ற கட்டமைப்பு பொது வேட்பாளர் விடயத்தை முன்னிறுத்துவதில் குறியாக இருக்கின்றது. அந்தக் கட்டமைப்பு பொருத்தமான பொது வேட்பாளரை தேடிக் கொண்டிருந்தது. இந்த நிலையைப் பிடித்துக் கொண்ட விக்னேஸ்வரன், தானே பொருத்தமான பொது வேட்பாளர் என்று இப்போது முன்வந்திருக்கிறார். அவரின் இந்த நடவடிக்கைகளினால் மக்கள் மனு குழுவினர், விடயத்தை விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாத கட்டத்தை அடைந்திருக்கிறார்கள். கடந்த வெள்ளிக்கிழமை விக்னேஸ்வரனின் அழைப்பில் பொது வேட்பாளர் விடயத்தைக் கையாளுவதற்கான குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் விக்னேஸ்வரனைத் தாண்டி எந்த அரசியல்வாதியும் கலந்து கொள்ளவில்லை. அது, விக்னேஸ்வரன் தொடர்பில் அவர்கள் கடந்த காலத்தில் பெற்ற அனுபவங்களின் வழி வந்ததாக இருக்கலாம்.

விக்னேஸ்வரன் தன்னை ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளராக முன்னிறுத்தி, அதனூடாக அடுத்த பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சேகரிப்பைச் செய்ய முடியும் என்று நம்புகிறார். ஆனால், இந்தப் பொது வேட்பாளர் விடயம் தமிழ்ச் சூழலில் எந்தவொரு அதிர்வையும் ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக, சில கட்சியினரும் குழுக்களும் கூடிக் கதைத்து பிரிந்து போவதோடு முடிந்து போகும். ஏனெனில், தமிழ் மக்களின் மனங்களை அறிந்து கொள்ளாமல், யாரோ வெளித்தரப்புக்களின் தேவைகளை நிறைவேற்ற முன்னெடுக்கப்படும் நாடகங்களாகவே இவை பார்க்கப்படும். அதனால், விக்னேஸ்வரனின் கனவும் பலிப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

# இன்றைய ராசி பலன்கள் - 14.04.2024




உங்கள் தினசரி செயல்களை செய்வது கடினமாக இருக்கும்.முக்கியமான முடிவு களை இன்று எடுக்க வேண்டாம். இன்று அமைதியுடன் இருக்க வேண்டியது அவசி யம்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். உங்கள் சகபணியாளர்களுடன் உரையாடும் பொழுது அமைதியான முறையை கடைபிடிக்க வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் நட்போடு பழகுங்கள்.

பணத்தை தக்க வைத்துக்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங் கள்.

இன்று நரம்பு சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப் படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




சாதகமான பலன்களுக்கு உங்கள் புத்திசாலிதனத்தில் நம்பிக்கை வைத்து செயலாற்றுங்கள்.உங்களது நேர்மறை யான எண்ணங்களும் தைரியமும் இதற்கு உதவும்.

உங்கள் பணி மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.உங்களிடம் உள்ள திறமைகளை வெளிக் கொணர வேண்டும்.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பயனுள்ள வகையில் இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க இயலும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறிது முயற்சி எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றினால் திறமையாக செயலாற்ற முடியும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையிடம் பேசும் போது பொறுமை அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங் களிடம் பணம் இருந்தாலும் திருப்திகரமான நிலை இருக்காது.

செரிமானக் கோளாறு பிரச்சினைகள் ஏற்பட லாம்.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.உங்கள் உணர்வுகளை கட்டுப் படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினம்.அதிகரிக்கும் வேலை காரணமாக தவறுகள் நேரலாம்.

உங்கள் துணையுடன் சகஜமாகப் பேசுவதன் மூலம் உறவில் திருப்தி நிலவும்.

இன்று பணத்தை சரியான முறையில் பயன்படுத்த இயலாது. பணம் கரைந்து விடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று கவலையின் காரணமாக பதற்றமாகக் காணப்படுவீர்கள்.




மனதில் உள்ள குழப்பங்கள் காரண மாக மேற்கொண்ட செயல்கள் தாம தமாக முடியும்.உங்கள் அஜாக்கிரதை காரணமாக விலைமதிப்பு மிக்க பொருளை இழக்க நேரும்.

இன்று பயணங்கள் ஏற்டலாம். அதனால் பதட்டம் காணப்படும்.இந்த பயணம் உங்க ளுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது.

இன்று விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மூலம் கருத்து வேறு பாடுகளை தீர்க்க முடியும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக தேவையில்லாத செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது தவிர்க்க இயலாதது.

கால்கள் மற்றும் தோள்களில் வலிகள் காணப்படும். உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




ஆன்மீகம் மற்றும் அது சம்பந்தமான ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும். அனுபவம் மூலம் இன்று பாடம் கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

உங்கள் பணிகளை குறிப்பிட்டநேரத் துக்கு முன் உங்களால் செய்ய இயலும்.இதன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம் பிக்கையைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் இனிமையான விஷ யங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்த மான ஜோடிகளாகத் திகழ்வீர்கள்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். வங்கியிருப்பு அதிகரிக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியை அளிக் கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியக் குறைபாடுகள் ஏதும் இருக்காது.




நீங்கள் விரைவாக செயலாற்றி உங்கள் பொறுப்புகளை எளிதில் முடிப் பீர்கள்.உங்கள் கனவுகள் நனவாகும். உங்களின் நேர்மறையான மனப் பாங்கின் மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

நீங்கள் ஆற்றும் பணியின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரண மாக நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வதன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

எதிர்பாராத பண வருவாய் காணப்படும். இதனால் மிகுந்த திருப்தி உங்களுக்கு ஏற்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படு வீர்கள்.




நீங்கள் உங்கள் முயற்சியின் மீது நம்பிக்கை வைத்து உங்கள் திறமை களை மேம்படுத்துவதன் மூலம் சாதகமான பலன்களைப் பெறலாம்.

உங்கள் பணிக்கு உங்கள் மேலதி காரிகளின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நீங்கள் எண்ணுவீர்கள்.இதனால் உங்கள் தன் னம்பிக்கை குறையும்.குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் மனதில் உள்ள பதற் றத்தையும் ஏமாற்றத்தையும் காண்பிப்பீர்கள்.

பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப் பதால் இன்று பணத்தை மிகவும் கவனமாக கையாள வேண்டும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

இன்று கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற உபாதைகளுக்கு ஆளாவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.04.2024


தனுசு

இன்று ஏமாற்றங்கள் காணப்படுவதால் இன்றைய நாளை திட்டமிட வேண்டியது அவசியம்.பொறுமையாக இருந்து மிடுக்குடன் செயல்பட வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணிகளைக் கையாளும்பொழுது கவனம் தேவை. எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாய் சண்டை நடக்கலாம். அதனால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நஷ்டத்தை தவிர்க்க உங்கள் நிதிநிலையை கண்காணிக்கவும்.


கும்பம்

நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வதில் நேர்மையாக இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை சம்பாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் அமைதியோடு பேசுவீர்கள். உங்களின் மனம் திறந்த இந்த அணுகுமுறை உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதை உங்கள் குடும்பம் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் வெளியிடம் செல்லுதல் போன்ற பயனுள்ள விஷயங்களுக்காக செலவு செய்வீர்கள்.


மகரம்

உங்களுக்கு நன்மை பயக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.பொதுவாக திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்களால் சுமுகமாக பணியாற்ற இயலும்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சம நிலையோடு பழகுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்துடனும் திருப்தியுடனும் காணப்படுவீர்கள்.


மீனம்

தியானம் மூலம் மன அமைதியை பெறலாம்.எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய திட்டமிடல் அவசியம்.

இன்று உங்கள் போக்கில் அனுசரனை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் சகஜமாக நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதிர்பாராதவிதமாக பணத்தை இழக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். உடற்பயிற்சி செய்து புத்துணர்வு பெறலாம். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park





# இந்திய தேர்தல் ஜனநாயகத்தை தீர்மானிக்கும் பணநாயகம்!



வி.எஸ்.சிவகரன்

உலகின் மிகப்பெரிய ஜன நாயக நாடான இந்தியாவில் 18 ஆவது மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக 543 மக்களவைத் தொகுதிகளுக்கு ஏப்ரல் 19ஆம் திகதி தொடக்கம் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெற்று ஜூன் நான்காம் திகதி வாக்கு எண்ணிக்கை இடம் பெற உள்ளது.

பல இனத்துவ மொழி வழி மாநிலங்களையும், பலவிதமான கலாசார மரபுகளையும் தன்னகத்தே கொண்டதுதான் பாரத தேசம். தென்னாசியாவில் மிகப் பெரிய நாடாகும்.

இந்திய நிர்வாகக் கட்டமைப்பு சமஷ்டி என்று அழைத்தாலும் முழுமையான சமஷ்டிக் கட்டமைப்பு இல்லை. அரைகுறை சமஷ்டி என்பதும், குறைமாத பிள்ளை என்றும் விளிப்பதுண்டு.

இந்தியாவைச் சூழ உள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, சீனா, மாலைதீவு, மியன்மார், சிக்கிம், பூட்டான் இதில் எந்த நாட்டுடனும் இணக்கமான உறவு நிலையில் இந்தியா இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவின் ஒரு மாநில அளவு கூட இல்லாத மிகச்சிறிய நாடுகளுடன் கூட நல்லுறவு இல்லை. இதில் சில நாடுகள் தமது தேவைக்கு பயன்படுத்துகின்றன. வேறு வழியின்றி இந்தியாவும் இசைந்து போகும் நிலையில் உள்ளது. அண்டை நாடுகளுடன் இராஜதந்திர – இராஜீக அணுகு முறையில் இந்திய நலன்களை பேணுவதும் பின்பற்றுகின்ற நிலைப்பாட்டிலும் கூட இந்தியாவின் அணுகுமுறை என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

எனவே வலிமையான பாரதத்தை உருவாக்குவோம் எனும் மோடியின் கோஷம் வெறும் பேச்சாகவே உள்ளது. ஏனெனில் சுதந்திர இந்தியாவில் ஆகக் குறைந்த கல்வித் தரமுடைய ஒரே பிரதமர் மோடிதான் என்பதே எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

## ஆகப்பெரிய கட்சி பா.ஜ.க.!

இந்திய சுதந்திரத்துக்காகப் போராடி மிக நீண்ட காலம் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி உட்கட்சி பூசலாலும் குடும்ப ஆதிக்கத்தாலும் பலவீனமான நிலையில் உள்ளது. எனவே உலகத்திலேயே ஆகப்பெரிய கட்சியாக பாரதிய ஜனதா கட்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது. முதல் இடத்தில் 18 கோடி உறுப்பினர்களுடன் அக் கட்சியும், இரண்டாவது நிலையில் ஒன்பது கோடியே 80 லட்சம் உறுப்பினர்களுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியும், மூன்றாவது இடத்தில் ஒன்பது கோடியே ஐம்பது லட்சம் உறுப்பினர்களுடன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் உள்ளன.

பத்து ஆண்டுகள் ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதா கட்சி மூன்றாவது தடவையாகவும் ஆட்சியைக் கைப்பற்ற பல்வேறு விதமான வாக்குறுதிகளையும் அரசியல் சூழ்ச்சித் தந்திரோபாயங்களையும் மாநிலத்துக்கு மாநிலம் ஒவ்வொரு விதமான தந்திரங்களை எல்லாம் உபயோகப்படுத்துகிறது.

அதற்கு உதவியாக வருமான வரித்துறை (IT), அமலாக்கல் துறை (ED ), தேசிய புலனாய்வு அமைப்பு (NIA), மத்திய புலனாய்வுத் துறை (CBI) ஆகிய அமைப்புகளை வைத்து ஆளும் மத்திய அரசுக்கு எதிராக உள்ள கட்சிகளை முடக்குவது, சிறைக்கு அனுப்புவது, பலவீனப்படுத்துவது என சர்வாதிகார போக்கில் செயற்பட்டு, அதிகாரத்தை தொடர்ந்து தக்க வைக்க முயல்கிறார்கள். இதில் யார் மத்தியில் ஆண்டாலும் இவ்வாறான துறைகளைத் தமது நலனுக்கு பயன்படுத்துவது என்பது சர்வ சாதாரணமாகி விட்டது. இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTI) பயன்படுத்தி 18 மாத காலம் வெளியே வர முடியாத வன்கொடுமையை உபயோகிப்பது போல் இந்திய அரசும் இந்தச் சட்டத்தை வைத்து தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க முனைகிறது. தொடர்ச்சியாகவே பலரை வெளியே வரமுடியாதவாறு சிறையில் வைத்துள்ளது. இதற்கு அண்மைய உதாரணம் கடந்த வாரம் நடந்தது. ஆம்ஆத்மி கட்சி எம்.பி. ஒருவர் பல மாதங்கள் கடந்த நிலையிலும் எதுவித குற்றச்சாட்டுகளும் முன் வைக்காமல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தமையால் நீதிமன்றம் வருமானவரித்துறைக்கு எச்சரிக்கை விடுத்து அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தது. அதே போல் டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைதான துணை முதலமைச்சர் மணிஸ் சிசோடியா பல மாதங்களாக சிறையில் உள்ளார். இதுவரை எந்த குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. பிணையில் வெளியில் விடுவிக்கவும்

தொடர்ச்சி ▼

# இந்திய தேர்தல் ஜனநாயகத்தை தீர்மானிக்கும் பணநாயகம்!

தொடர்ச்சி ▲

இல்லை. தற்போது டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரி வால் கைதாகி சிறையில் உள்ளார். அதேபோல் இதே தொடர்புடைய வழக்கில் தெலுங்கானா முன்



னாள் முதலமைச்சர் சந்திர சேகர ராவின் மகள் கவிதாவும் கைதாகி சிறையில் உள்ளார். தமிழகத்தில் தி.மு.க. அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி அம லாக்கல் துறையால் கைது செய் யப்பட்டு பல மாதங்களாக சிறை யில் உள்ளார். இப்படி நாடு முழுவதும் தமது அரசியல் எதிரி களை மத்திய அரசு தனது நல னுக்காகப் பயன்படுத்தி சிறை தள்ளுவதும், வழக்குப் போடு வதும், சோதனையிடுவதும், குற்றச்சாட்டுக்களை உருவாக் குவதும் என்பது தொடராகவே உள்ளன.

இந்த ஜனநாயக விரோதப் போக்கு தேர்தலில் எவ்வாறு எதிரொலிக்கப் போகின்றது என்பது தெரியவில்லை.

### சிறுபான்மையின மக்களை அடக்கும் எதேச்சாதிகாரம்

சிறுபான்மையினரின் ஜன நாயகக் குரலை படுகொலை செய்ய மோடி அரசு தீவிரம் காட்டுகிறது என எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகவே குற்றம் சாட்டி வருகின்றன. அடிப்படை வாத சனாதன கோட்பாட்டை நிறுவ முயல்கிறது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தான அரசமைப் பின் 370 சிறப்புரிமையை நீக்கி, மாநில அந்தஸ்தை இல்லாமல் செய்து, யூனியன் பிரதேசங்கள் ஆக்கியமை, சிறுபான்மையி னத் தலைவர்களை பிரிவினை வாதிகள் எனும் நோக்கில் பல ஆண்டுகள் வீட்டுச் சிறையில் வைத்தமை, அதேபோல் மணிப்பூர் மாநிலத்தில் உள்ள சிறுபான்மை இனத்திற்கு எதிராக வன்முறை யைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்த்தமை, யூனியன் பிரதேசங் களில் மக்களால் தெரிவு செய் யப்பட்ட முதலமைச்சருக்கு மாறாக ஆளுநர்களை வைத்து சர்வாதிகார நிர்வாகம் நடத்து கின்றமை போன்ற கெடுபிடிகள் தொடருகின்றன. டெல்லி, புதுச் சேரி போன்ற மாநிலங்கள் தொடர்ந்து மிகவும் பாதிக்கப்படு கின்றன.

இலங்கையில் உள்ள மாகாண சபையை ஆளுநர்களால் அதி காரம் செய்வது போல் இப்படி ஜனநாயகம் எனும் போர்வை யில் ஒற்றையாட்சி கோட்பாட்டை மத்திய அரசு செயல்படுத்த முனைவதாக தி.மு.க. போன்ற மாநில சுயாட்சி கோரும் கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அருணாச்சல் பிரதேசத்தில் இருந்து லடாக் வரை சீனாவின் ஆதிக்கமும், நில அபகரிப்பும் கிராமங்களுக்கு புதிய பெயர் மாற்றமும் கிராமங்களை உருவாக் குவதும் என சீனாவின் மேலா திக்கம் தீவிரம் பெற்று வருகிறது. அதே போல் காஷ்மீர் எல்லை யில் பாகிஸ்தானின் ஊடுருவல் என அண்டைய நாடுகளை கட்டுப் படுத்த முடியாமல் தடுமாறுகிறது மோடி அரசு. அதற்குப் பதிலாக இந்துத்துவ வெறியை ஊட்டி காவிமயமாக்க முனைகிறது.

ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளையும் அதன் துணை அமைப்புகளையும் தூண்டி, சிறுபான்மையினருக்கு எதிராக தொடர்ந்து வெறுப்பூட்டும் அரசி யல் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னைய இரண்டு தடவைகள் பா.ஜ.க. மிக இலகுவாக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி யமை போல் இம்முறை இலகுவாக வெற்றி பெற்று விட முடியாது. ஏனெனில் காங்கிரஸ் தலை மையில் இந்தியா கூட்டணி ஓரள வுக்கு நெருக்கடியை கொடுக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக தென் மாநிலங்களில் பா.ஜ.க. பெரும் பின்னடைவை எதிர் நோக் கலாம். அதில் கேரளா, தெலுங் கானா, ஆந்திரா, தமிழ்நாடு போன்றவற்றிலும், தற்போது கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சி உள்ளதால் அங்கும் சவாலையே எதிர்கொள்ளலாம்

மேற்கு வங்கம், பஞ்சாப், ஒடிசா, இமாச்சல் பிரதேசம், மிசோ ரம், டெல்லி போன்ற மாநிலங் களிலும் பெரும் சவால் ஏற்பட லாம். ஏனைய மாநிலங்களிலும் கூட இந்தியா கூட்டணி பா.ஜ.க வுக்கு நெருக்கடியைக் கொடுக்க லாம்.

### காங்கிரஸ் ஓரளவு தேறும்

கடந்த இரண்டு தடவைகள் நாடாளுமன்றத்தில் உத்தியோக பூர்வ எதிர்க்கட்சி இல்லாமல் இருந்தது. இம்முறை காங்கிரஸ் எதிர்க்கட்சி அந்தஸ்தை பெறக் கூடிய அளவில் 55 க்கு மேற்பட்ட ஆசனங்களை வெல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது. மத்தியில் மூன்றாவது தடவையாகவும் பார திய ஜனதா கட்சி ஆட்சி அமைக் கக்கூடிய கள நிலைவரம் வட மாநில ஆதரவோடு ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது. அதே போல் அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதால் இந்துத்துவ வாக்காளர்கள் ஓரளவுக்கு மோடி மீதான ஆதரவை ஏற்படுத்தலாம். சிறுபான்மை இனங்களுக்கு எதிரான விரோத போக்குகளும் இந்துத்துவ வாக்குகளை கவர லாம்.

ஆனாலும் கூட எதிர்ப்பு வாக்குகளும் இல்லாமல் இல்லை. தேர்தல் பத்திரமூலம் 6,060 கோடி ரூபாவுக்கு மேல் பெற்றுக் கொண்டதும் முக்கிய விடயம். இப்பணத்தை வருமானவரி செலுத்துவதில் முறைகேடு உள்ள கம்பனிகளே அதிகம் வழங்

தொடர்ச்சி ▼

# இந்திய தேர்தல் ஜனநாயகத்தை தீர்மானிக்கும் பணநாயகம்!

தொடர்ச்சி ▲

கியுள்ளன எனும் குற்றச்சாட்டும் உள்ளது. கறுப்புப் பண விவகாரத்தை முழுமையான முடிவுக்கு கொண்டுவராததும், வேலை வாய்ப்பின்மையும், அதானி – அம்பானி வர்த்தக சாம்ராஜ்யங்களுக்கு ஆதாராவாக இருப்பதும், விவசாயிகள் நலன் பேணத் தவறியமையும் வாக்காளர்கள் மத்தியிலே மாறுபட்ட நிலைப்பாட்டை ஏற்படுத்தலாம்.

குறிப்பாக படித்த வாக்காளர்கள் மத்தியிலே அரசின் ஜனநாயக விரோத போக்கிற்கு எதிரான மனோநிலை உண்டு.

பா.ஜ.கவினர் அசுர பலத்தோடு மீண்டும் ஆட்சி அமைத்தால் சட்ட மேதை அண்ணல் அம்பேத்காரின் அரசியல் சாசனத்தையும் மாற்றி விடுவார்கள் என எதிர்க்கட்சிகள் அச்சம் தெரிவிக்கின்றன. ஏனெனில் நாடாளுமன்றத்தில் வைத்தே பிரதமர் மோடி அடுத்த ஆட்சியில் துணிகரமான தீர்மானங்களை மேற்கொள்ளப் போகிறார் என உரையாற்றியிருந்தார். இவ்வாறான சர்வாதிகார ஆட்சியாகவே மூன்றாவது முறையான ஆட்சி தொடரக் கூடிய வாய்ப்பு உண்டு. அதுதான் பாரதிய ஜனதாவின் ஆட்சியின் முடிவிற்கு வரும் காலமாகவும் அமையலாம்.

மோடி!' என பாரதிய ஜனதாவும், 'இந்தியாவை காக்க ஸ்டாலின் அழைக்கிறேன்!' என தி.மு.கவும், 'ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம்!' என அ.தி.மு.கவும் தேர்தல் கால கோஷங்களை முன் வைத்துப் பரப்புரையில் ஈடுபடுகின்றன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் தி.மு.க. கூட்டணி ஓரளவு வலிமையானது. அ.தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேறினாலும் உட்கட்சி மோதலால் வலிமை இழந்த நிலையில் காணப்படுவதனால் கூட்டமைப்பதிலேயே பல்வேறு விதமான சவால்களை எதிர்கொண்டது.

விவகாரமும் தொடர்ந்து பேசு பொருளாகவே இருப்பதாலும், எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணியில் தாமதம் ஏற்படுவதாலும் ப.ஜ.க. எதிர்ப்பு நிலை நீடிக்கின்றது. இந்தி திணிப்பு, மாநில சுயாட்சிக்கு குந்தகமானநிலை, ஆளுநரின் தன்னதிகார செயல்பாடு போன்றவற்றை முன்னிறுத்தி தி.மு.க. அரசு தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பிரச்சாரத்தை செய்து வருகிறன்றது.

தி.மு.கவுக்கு ஆதரவாக தமிழகத்தில் உள்ள ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் நடுநிலை கடந்து தி.மு.கவின் ஊது குழல்களாகவே செயற்பாடுவதால், தி.மு.கவின் வாக்கு



## தமிழக நிலைமை

ஆனால் தமிழகம் புதுச்சேரியில் உள்ள 40 மக்களவைத. தொகுதியிலும் பா.ஜ.கவிற்கு சவாலான நிலையே காணப்படுகிறது. திராவிட கட்சிகளின் ஆதிக்கத்திலேயே தமிழகம் கடந்த 50 ஆண்டுகளாக உள்ளது. இந்தியாவில் முதல் முறையாக மாநில கட்சி ஒன்று நாடாளுமன்றம் சென்றதும் (1957), மாநில ஆட்சியை கைப்பற்றியதும் (1967) தி.மு.கதான். அதிகமான தனித்துவ அடையாளத்தை கொண்டது தமிழ்நாடு. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் திராவிட கோசமும் பகுத்தறிவு சித்தாந்த நோக்கு நிலையும் 50 ஆண்டுகள் கடந்தும் மதவாத சக்திகளை தமிழகத்திற்குள் கால் பதிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன.

'வேண்டும் மோடி மீண்டும்

மத்திய அரசும் இவர்கள் வலிமையான கூட்டணி அமைப்பதை விரும்பவில்லை. எனவே அ.தி.மு.க. கூட்டில் இருந்த பா.ம.க., த.மா.க., புதிய நீதிக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், அத்துடன் அ.ம.மு.க., ஓ.பி.எஸ். அணி போன்ற கட்சிகளுடன் பா.ஜ.க. கூட்டமைத்து முன்னணித் தலைவர்களை களத்தில் இறக்கி களம் காண முனைகிறது.'

ஆனால் தமிழக வாக்காளர் மத்தியிலே மோடிக்கு எதிரான மனோநிலை காணப்படுகிறது. வெள்ள அனர்த்த காலத்திலும், புயல் தாக்கிய நேரங்களிலும் தமிழகம் கேட்ட நிதி உதவியை வழங்கவில்லை. ஒரு ரூபா வரி அறவீட்டு 27 சதம் மீள வழங்கப்படுகின்றது. உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக தொகை வழங்கப்படுகின்றது. மருத்துவ கல்விக்கான நீட் தேர்வு

வங்கியை நிலை நிறுத்துவதற்கு பெரும் வாய்ப்பாக இருக்கும். அவ்வுதமான சூழலில் பா.ஜ.க. தமிழகத்தில் வெற்றி பெறுவது என்பது குதிரைக்கொம்பாகவே அமையும்.

## கிறிஸ்தவ, இஸ்லாமிய வாக்குகளின் பலம்

அ.தி.மு.கவும் பா.ஜ.கவை கடுமையாக விமர்சிக்கவில்லை, இவர்களுக்குள் கள்ளக் கூட்டு இருக்கிறது என தி.மு.க. தொடர்ந்து குற்றச்சாட்டி வரும் நிலையிலும், இஸ்லாமியர்களுக்கு எதிரான ஊயுயு சட்டத்தை மக்களவையிலும் மாநிலங்களவையிலும் ஆதரித்து வாக்களித்தது, அ.தி.மு.கவை சிறுபான்மை மக்களின் எதிரியாகவே தொடர்ந்து கட்டமைத்துவரும் தி.மு.கவின் பிரசாரம் கடந்த தேர்தல்களில் எடுபட்டது போல் இந்த

தொடர்ச்சி ▼



# இந்திய தேர்தல் ஜனநாயகத்தை தீர்மானிக்கும் பணநாயகம்!

தொடர்ச்சி ▲

தேர்தலிலும் முனைப்பு பெற வாய்ப்பு உண்டு. ஏனெனில் தமிழகத்தில் ஏறக்குறைய 45 லட்சத்துக்கு மேற்பட்ட கத்தோலிக்கர்களும், 46 லட்சத்துக்கு மேற்பட்ட இஸ்லாமியர்களும் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தி.மு.க வின் மதச்சார்பற்ற கூட்டணியையே ஆதரிக்கின்றனர். எனவே மூன்று முனைப்போட்டி நிலவுவதால் இவர்களுடைய வாக்கு மிக அவசியமானது.

ஆனால் இதற்கு அப்பாலும் கூட பணம், பரிசுப் பொருள் வழங்குவதுடன் மக்களுக்குப் போலி வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்றுவது என்பதும் தேர்தல்களிலே தாக்கம் செலுத்தும். தி.மு.கவின் 'திருமங்கலம் பார்முலா' என்பதைப் போல் தேர்தலில் பணம் யார் அதிகம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வாக்களிக்கின்ற நிலைப்பாடு தொடர்கிறது.

ஏனெனில் இந்த அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து திருடிய ஊழல் பணத்தையே மக்களுக்கு மீண்டும் தேர்தல் காலத்தில் தருகிறார்கள் என்னும் நிலையிலேயே வாக்காளர்களின் மனோநிலையும் இருப்பதனால் அவர்களும் சர்வ சாதாரணமாகவே தேர்தலுக்கு இலஞ்சம் பெறுகிறார்கள்.

தேர்தல் ஒப்பிட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டு செயற்பாட்டாளரான தேர்தல் வீயூகர் பிரசாந்த் கிஷோர் போன்று பலர் செயல்படுகின்றார்கள். பல மாநிலங்களினுடைய வெற்றிக்கு அது இலாபகரமாகவும் பயன்பட்டு இருக்கிறது. சிஸ்டத்தின் ஊடாகக் கட்சிகளின் விருப்பு எண்ணத்தை உட்புகுத்தும் இவ்விதமான தேர்தல் வியூகர்கள் பல்லாயிரம் கோடி பணத்தைப் பெற்றுக் கொண்டு அதனை உருவாக்கிக் கொடுக்கின்றனர். இதற்கு அப்பால் தற்பொழுது தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்துவதற்கும் மேடை அமைப்பதற்கும் ஆள்களை அழைத்து வருவதற்கும், மாலை போடுவதற்கும், கோஷம் போடுவதற்கும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கட்டணம் வழங்கப்படுகிறது. அதற்கும் பல அமைப்புகள் உருவாகிவிட்டன. தலைவர்களின் கூட்டங்களுக்கு எவ்வளவு மக்கள் திரள் தேவைப்படுகிறதோ அதை கூறி அதற்குரிய பணத்தையும் வழங்கி விட்டால் அதற்கான மக்களை அழைத்து வந்து அவர்கள் அந்தக் கூட்டத்தை நடத்திக் கொடுப்பார்கள். ஆகவே தேர்தலுக்கு வாக்களிக்கக் காசு கொடுப்பது ஒருபுறம். தற்போது பரப்புரை கூட்டத்திற்கும் காசு கொடுக்கும் நிலை வந்துவிட்டது.

இந்தியத் தேர்தல் என்பது தற்போது கோடிகள் உள்ளவர்கள் மட்டுமே களமாட முடியும் என்பது நிதர்சனம் ஆகிறது.

### ஈழத் தமிழர் விவகாரம் பேசு பொருளாக இல்லை

இந்த மக்களவைத் தேர்தலில் ஈழத் தமிழர் விவகாரம் பெரிய பேசு பொருளாக எந்த கட்சிகளாலும் முன்னெடுக்கப்படவில்லை. தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகளும் நாம் தமிழர்கட்சியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில இடங்களிலே ஆங்காங்கே கோடி காட்டியுள்ளன. அதற்கு அப்பால் ஒரு பேசு பொருளாக ஈழத்தமிழர் விவகாரம் முன்வைக்கப்படவில்லை. அத்துடன் கச்சதீவு விவகாரமும் வெறுமனே வாக்கு அரசியலுக்காக பா.ஜ.கவால் முன்னெடுக்கப்படுகிறது.

எனவே மத்தியில், பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றலாம். காங்கிரஸ் எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு வரக்கூடிய வாய்ப்பு உண்டு. தமிழகத்தில் அதிகமான தொகுதிகளை தி.மு.க. கூட்டணி கைப்பற்றலாம். அ.தி.மு.க. கூட்டணிக்கு ஒரு சில இடங்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு. பா.ஜ.க. கூட்டணி சில இடங்களில் முன்னிலை வகிக்கக்கூடிய ஏது நிலை காணப்படுகிறது.

நாம் தமிழர் கட்சி கடந்த முறை பெற்ற வாக்குகளை கூட தக்க வைத்துக் கொள்வது சிரமமாக இருக்கும். ஏனெனில் அவர்களுக்கு வழமையான சின்னம் இன்மையும் ஒரு காரணமாக அமையலாம். மொத்தத்தில் இந்தியத் தேர்தல் என்பது ஏமாற்றுதல், பணம் வழங்குதல், பரிசு வழங்குதல், இவ்வாறான மோசடி செய்தல் போன்ற நிலைப்பாடுகளில்தான் தொடர்கிறது. இந்த தேர்தல் ஜனநாயகம் என்கின்ற போர்வையிலே அதிகார பலத்தையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் எதிர் நோக்கியதாகவே விடயங்க கட்டவிழ்கின்றன. ஆகவே ஜனநாயகம் என்பது கும்பலின் ஆட்சி எனும் லெனினிச வாதம் இந்திய தேர்தல் களத்திற்கு மிகப் பொருத்தமாக இருக்கின்றது.

# 68 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகக் கொழும்பில் வழக்கு



கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட 68 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொது சுகாதார பரிசோதகர்களால் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இது வரையான காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள ஹோட்டல்கள், பேக்கரிகள், மீன் மற்றும் இறைச்சிக் கடைகள், குளிரூட்டப்பட்ட உணவுப் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் உள்ளிட்ட 700 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என கொழும்பு பிராந்திய நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளில் தரமற்ற உணவுப் பொருள்கள், உரிய வகையில் களஞ்சியப்படுத்தப்படாமை, லேபிள்கள் மற்றும் பொதிகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக இத்தகைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

# பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி 14 ஆயிரம் பொலிஸார் கடமையில்




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் ஒன்றுகூடும் புத்தாண்டு நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் மக்களின் பாதுகாப்பிற்காக விசேட பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனையின் பிரகாரம், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் புத்தாண்டு நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட 4500 இற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதில் பங்கேற்கும் மக்களின் பாதுகாப்பு கருதி, சுமார் 14 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுமார் 500 விசேட பொலிஸ் அதிகாரிகளும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 6 பேர் உள்ளிட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 75 கால் போத்தல் சாராயத்துடன் ஊரெழுவில் பெண் ஒருவர் கைது



யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊரெழு பகுதியில் பெண்ணொருவர் 75 கால் போத்தல்கள் சாராயத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுன்னாகம் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப்: வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் (SLICLL) – விற்பனை மற்றும் செயல்படுத்தல் குழுக்கள் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் ஓர் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தியது.

அனைத்து SLICLL கிளைகளின் பணியாளர்கள் மற்றும் நிறுவன முகாமைத்துவத்துடன் ஆலோசகர்களை ஈடுபடுத்தும் வகையில் இந்த சிறப்பு முயற்சி ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெற்றது.

SLICLL உயிர்களைப் பாதுகாத்தல், சமூகங்களை வலுப்படுத்தல், ஒட்டுமொத்த சமூக நல்வாழ்விற்கும் பங்களிப்பதற்கும் உறுதிபூண்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பிற்காக வாதிடுவதன் மூலம், நிறுவனம் மாநிலத்தின் நலனில் சமூக சுமையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன், பல்வேறு சமூகங்களுக்கு பாதுகாப்பு செய்தியை விற்பனை குழுக்கள் திறம்பட தெரிவித்ததால் இந்த பிரச்சாரம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது.









# ‘நாம் முன்னெடுக்கும் பாதைகள்’ அறிமுகம் இலங்கையின் முதலாவது பசுமை வரைபடம்

“நாம் முன்னெடுக்கும் பாதைகள்” EUNIC இலங்கை மற்றும் Good Life X இணைந்து முன்னெடுக்கும் திட்டமாகும்.

EUNIC – ஐரோப்பிய ஒன்றியத்தின் கலாசாரத்திற்கான தேசிய நிறுவனங்கள் – ஐரோப்பிய ஒன்றியத்தின் 36 அங்கத்துவ நாடுகளின் தேசிய கலாசார நிறுவனங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும். EUNIC இலங்கை – இலங்கையிலுள்ள Alliance Francaise மற்றும் பிரான்ஸ் தூதரகம் மற்றும் மாலைதீவுகள், கோயித் நிறுவனம், பிரிட்டிஷ் கவுன்சில். சுவிஸ் தூதரகம், நெதர்லாந்து ராஜ்ஜிய தூதரகம், இத்தாலியின் தூதரகம் மற்றும் EU வின் அனுசரணையுடன் கலாசார உறவுகள் மற்றும் படைப்பாற்றல் மற்றும் வெவ்வேறுபட்ட மக்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையை கையாளுகின்றனர்.

Good Life X, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கலாசாரத்திற்கான தேசிய நிறுவனங்கள் (EUNIC), – இலங்கையின் முதன்முறையாக படைப்பாற்றல் மிக்க கலைஞர்களை – தனிநபர்கள், நிறுவனங்கள், அல்லது வியாபாரங்கள் பற்றிய தகவல்களை திரட்டி ஆவணப்படுத்தி டிஜிட்டல் மற்றும் அச்சிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்படுவார்கள்.

இக் கலைஞர்களை அவர்களின் பணிமுறைகள் மற்றும் நீடிப்புத்திறன், சுழற்சி முறை, சகவாழ்வு முறைகள் மூலம் மக்களும் பூமியுடன் தொடர்புட்ட தலைப்புகளாக இருக்க வேண்டும். “நாம் முன்னெடுக்கும் பாதைகள்” எனும் திட்டமானது பெருகிவரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் படைப்பாளிகளின் பங்கை தீர்வாக முன்வைக்கும் திட்டமாகும்.

இத்திட்டம் கொழும்பில் வார இறுதியில் முன்னெடுக்கும் கண்காட்சியில், படைப்பாளிகள் அவர்களின் திறமை, நோக்கம் மற்றும் கைத்திறன்களை வருகையாளரான தொழில்வல்லுநர்கள், மாணவர்கள், படைப்பாற்றல் துறையின் முன்னோடிகள், உடனுழைப்பார்கள், தொடர்புபட்ட தனியார் மற்றும் பொது பங்குதாரர்கள் மற்றும் ஊடகத்தின் முன்னால் காட்சிப்படுத்தும் வாய்ப்பினை பெறுவார்கள். இது திட்டமானது மார்ச் முதல் ஜுலை 2024 வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






# பெண்களை கொண்டாடும் சியபத பினான்ஸ் பி.எல்.சி





ஒரு பெண்ணை வலுப்படுத்தல் என்பது ஒரு தேசத்தையே வலுப்படுத்துவதாகும். இந்த சர்வதேச மகளிர் தினத்தில் அதன் ஆழமான விழுமியங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் வகையில், சியபத பினான்ஸ் பி.எல்.சி நாடு முழுவதும் உள்ள பெண்களின் கூட்டுப் பலம், சக்தி மற்றும் அவர்களது சாதனையைக் கொண்டாட ஒன்றாக இணைந்தது.

தலைமைப் பொறுப்பை ஏற்பதில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில், சியபத பினான்ஸ் பி.எல்.சி. புகழ்பெற்ற கூட்டாண்மை மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர் இருஷி அலுவிஹாரேவால் "உயர்வு, பிரகாசம், மற்றும் செழிப்பு" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்புச் செயலமர்வை நடத்தியது.

சியபத பினான்ஸ் பி.எல்.சி. உள்ளூர் நிறுவனத் துறையில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளதோடு, செழிப்பானதொரு பணிச்சூழலை தம் பணியாளர்களுக்கு வழங்குகிறது.

மேலும் தடைகளைத் தகர்த்தெறிந்து, நாட்டின் எதிர்காலத்தை மறுவடிவமைக்க, பெண்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கி அவர்களை பெருமைப்படுத்துவதை தொடக்கத்திலிருந்தே மேற்கொண்டு வருகிறது.

தொழில்துறையில் உள்ள தலைவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக, நிறுவனம் தனது கொள்கைக்கு ஏற்ப அனைத்து தரங்களிலும் தனது ஊழியர்களில் 40 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ளது.

அதே போல் பாலினம் மற்றும் பிற சமூக விதிமுறைகளைப் பொருட்படுத்தாமல் வளர்ச்சிக்கு சமமான வாய்ப்பை உருவாக்குவது, ஒரு வலுவான மற்றும் தகுதியான அணிக்கு வழிவகுக்கும் என்பதிலும் நம்பிக்கை வைத்துள்ளது.

அதுமட்டுமல்லாது சியபதவின் வாடிக்கையாளர்கள் மத்தியில் 23 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவம், மீள் திறன்மிக்க பொருளாதாரம் மற்றும் இலங்கையை கட்டியெழுப்புவதற்கு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் அதன் பார்வைக்கு மேலும் சான்றாகும்.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, சியபத பினான்ஸ் நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வெளிவரும் பெண் தொழில்முனைவோரின் முயற்சிகளுக்கு பங்களித்துள்ளது.

இந்த சர்வதேச மகளிர் தினத்தில், நிறுவனம் "சியபத பினான்ஸ் லியக மஹிம" என்ற தொனிப்பொருளின் கீழ் பல வேலைத்திட்டங்களைத் தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெண்களின் உண்மையான ஆற்றலை வெளிக்கொண்டு வரும் ஒரு பகுதியாக, சியபத நாடு முழுவதிலும் கல்வி மற்றும் நிதிக் கல்வியறிவு வேலைத்திட்டங்களை ஆண்டு முழுவதும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

சம்பத் வங்கிக் குழுமத்தின் துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எ.ல்சி, வடகிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலான கிளை வலையமைப்பைக் கொண்டுள்ளது.

கடந்த 18 ஆண்டுகளில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் முயற்சிகளை மேம்படுத்துவதோடு, நாடு முழுவதிலும் உள்ள தனிப்பட்ட நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நிறுவனம் பங்களித்துள்ளது.

